[2003 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உரிமம் பெற்றவர் அனுமதிக்கப்பட்ட பகுதிக்குப் பதிலாக தடை செய்யப்பட்ட பகுதியில் மதுபானக் கடை ஏதேனும் நடத்துவது குறித்து உரிமம் வழங்கும் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் அவர் மீது குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.என். இலட்சுமணன் இருக்கையில் இல்லை.

வினா எண் 282, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

282—

புறவழிச் சாலை

•18567—திரு. கு. அன்பழகன்:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வத்தலகுண்டு நகருக்குள் நுழையும் சாலை நெருக்கடியாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள புறவழிச் சாலை அமைக்கும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வத்தலகுண்டுக்கு புறவழிச் சாலை அமைப்பதன் நோக்கம் என்னவென்றால் மதுரையில் இருந்து

2003 ஏப்ரல் 23]
கொடைக்கானலுக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள், திண்டுக்கல்லில் இருந்து கொடைக்கானலுக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள், அதேபோன்று மதுரை, திண்டுக்கல், இந்தப் பகுதியில் இருந்து கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள் மொத்தம் சுமார் 6,000 வாகனங்கள் வத்தலகுண்டு பகுதியில் செல்கின்றன. சாலை மிகவும் குறுகலான சாலை. ஒரு வண்டி நின்றுவிட்டால் பின்னால் வருகின்ற வண்டிகள் 100, 200 வண்டிகள் நின்று விடுகின்றன. எனவே, அங்கே பயணிகளும், பொதுமக்களும் மிகவும் துன்பத்திற்கு உள்ளாகிறார்கள். சமூக விரோதிகள் அதைப் பயன்படுத்திக்கொண்டு பல்வேறு வகையான பிரச்சினைகளிலே ஈடுபடுகின்றார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட அந்தக் குறுகிய சாலை வழியாகத்தான் தினம் தினம் சென்றுகொண்டு வருகிறார்கள். அவர்களும் அந்தக் கஷ்டத்தை உணர்வார்கள். ஆகவே முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அதை இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலாவது பரிசீலனை செய்து, அந்தப் புறவழிச் சாலையை அமைத்துக் கொடுக்க முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டு நகரில் அமைக்கப்பட உத்தேசிக்கப்படும் புற வழிச்சாலை, திண்டுக்கல், வத்தலகுண்டு, பெரியகுளம், தேனி, குமுளி, மாநிலச் சாலை எண் 36-ல் கிலோ மீட்டர் 31/0-ல் இருந்து பிரிந்து இதே சாலையில் கி.மீ. 35/0-ல் இணைவதாக அமையும். மேற்கண்ட சாலைகளைப் புறவழிச் சாலை வகைபாட்டுக்கு மேம்படுத்த தோராயமாக ரூ.640 லட்சம் தேவைப்படும். இப்புறவழிச் சாலையை அமைக்கும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இச்சாலையின் அவசியத்தை எடுத்துக் கூறியதால், இப்புறவழிச் சாலை பற்றி ஆய்வு செய்வதற்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்த புறவழிச் சாலையைக் கடந்து செல்லும்போது இதுவரை எந்த சமூக விரோத செயலும் நடைபெறவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2003 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலை என்கின்ற காரணத்தினால், அமைச்சரிடத்திலே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, திருமங்கலத்தில் இருந்து செக்கானூரணி, சோழவந்தான் தாண்டி தேசிய நெடுஞ்சாலையை இணைப்பதுபோல் ஒரு புறவழிச் சாலை திட்டம் இருந்தது. அதற்கு மத்திய அரசுகூட, அதை ஆய்வு செய்வதற்காக 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். அந்தத் திட்டம் எப்படி இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனி வினா எழுப்பினால் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாரவி அவர்கள்.

திரு. ராதாரவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த புறவழிச் சாலை என்பது பொதுவாக போக்குவரத்து நெரிசலுக்காக அமைக்கப்படும் சாலை. ஆனால் புறவழிச் சாலை அமைக்கப்பட்டவுடன் சிற்றுண்டிச் சாலைகள், கடைகள், பல கட்டடங்கள் வருவதனால் மேலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு மற்றொரு புறவழிச் சாலை ஏற்படுத்த வேண்டிய நிலை உள்ளது. அப்படியல்லாமல், எதிர்காலத்தில் புறவழிச் சாலைகள் அமைக்கப்படும்போது இப்படிப்பட்ட சிற்றுண்டிச் சாலைகள், கட்டடங்கள் கட்டக் கூடாது என்று சட்டங்கள் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கின்ற புறவழிச் சாலையில் மீண்டும் அந்தப் பகுதியில் சிற்றுண்டிச் சாலைகள், உணவு விடுதிகள் அமைக்கக் கூடாது என்பது குறித்துப் பேசினார்கள். பொதுவாகவே,

2003 ஏப்ரல் 23]

போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையிலும், சாலை விதிகளைக் கடைப்பிடிக்கின்ற வகையிலும், அந்தப் பகுதியில் உணவு, சிற்றுண்டி விடுதிகள் ஏற்படுத்துவதற்கு எந்தத் தடையும் இதுவரை இல்லை. இந்த உணவு, சிற்றுண்டி விடுதிகள் அமைக்கப்படுகின்றபோது, போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கின்ற பகுதி ஏதாவது ஒன்றை குறிப்பிட்டு அவர்கள் சொல்வார்களேயானால், அந்தப் பகுதியில் நெரிசல் இல்லாமல் இருப்பதற்கு, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 283, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

வினா எண் 284, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

284—

சட்டக் கல்லூரி பாட நூல்கள்

***13314—அ—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சட்டக் கல்லூரிகளின் பாடநூல்களை தமிழில் அச்சிட்டு வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சட்ட நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கான அனைத்து முயற்சிகளும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.